Registered at the G. P. O. AS A NEWSPAPER

# சன்மார்க்கபோதினி

# SANMARKA POTHINI

பத்திரவிலைவிதம்
வருஷம் ரூபா க-ரு0
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் [illegible]
இந்தியாவுக்கு சதம் [illegible]
பிறதேசங்களுக்கு [illegible]

விளம்பரவிலைவிதம்
வரி ஒன்றுக்குச்சதம் 10
[illegible] க்குமேல்நெருவரிக்கு 8
[illegible] க்குமேல் ......... 6
இணைப்பிரசுரமொவ்வொன்றிற்கும் [illegible] ஒன்று

ஒன்றுவிட்டொருசெவ்வாய்க்கிழமைகளிற் பிரசுரஞ்செய்யப்படும்

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

Published on every other Tuesday

VOL. XXXII. JAFFNA FEBRUARY 8th 1916 No 3

நஉம் புத்தகம் யாழ்ப்பாணம் ககூகசும் (வரு) மாசிமீ அஉ செவ்வாய்க்கிழமை. சஞ்சிகை ௩

LIBRARY [illegible] 1995 UNIVERSITY OF JAFFNA

## அர்ச். பெர்னர்து சபையாரின் நாய்களும் யுத்தமும்.

—o—

அர்ச். பெர்னர்துசபையார் வைத்துவளர்க்கிற நாய்கள் பனியால் மூடப்பட்டிருக்கும் மலையிடங்களில் வழிப்போக்கருக்குச் செய்துவரும் நன்மைகள் அற்பமல்லவென்பது முன்னமேதெரிந்தவிஷயம். சுவிற்சலாந்துதேசத்தில் உன்னத மலைச்சிகரங்கள் பனியால்மூடப்பட்டிருக்குங்காட்சிகளை ஒவ்வொருவருஷமும் பலபேர்போய்ப் பார்வையிட்டுக் களிக்கிறார்கள். அம்மலைகளில் அர்ச். பெர்னர்துமலையே அதிவிசேஷம்பெற்றது. இம்மலையிற்றான் சுவிற்சலாந்திலிருந்து இத்தாலிக்குப்போகிறபாதை இருக்கிறது. அப்பாதை பனியால்மூடப்பட்டிருப்பதால் அதனால் பிரயாணஞ்செய்வது மிக்கபிரயாசமும் மோசமுமாயிருக்கிறது. பயணக்காரரில் அனேகர் பாதையின்வருத்தத்தாலும் குளிரின்தாக்கத்தாலும் வழியிலே மரிக்கத்தக்கதாக நேரிடுவதுமுண்டு. இவ்வித பிரயாணிகளின் தற்காப்புக்காக இம்மலையின் உயர்ந்தசிகரத்திலே கத்தோலிக்க சந்நியாசிகளின் மடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவ்விடத்திலே பிரயாணத்தால் களைத்து விறைத்துவரும் யாவருக்கும் உணவும் ஆறுதலும் அளிக்கப்படுகிறது. பயணக்காரரை ஆதரவுசெய்தலே அம்மடத்துச் சந்நியாசிகளின் தொழில். பகலிலே அல்லது மப்பு மந்தாரமற்ற காலங்களிலே பிரயாணிகள் பத்திரமாய் இம்மடத்துக்குவந்து சேருகிறார்கள். ஆனால் பனி அதிகரித்தகாலங்களிலும் மந்தாரமானநாட்களிலும் பிரயாணிகள் மடங்களுக்குவந்துசேருமுன் எவ்வளவோ கஷ்டங்களை அநுபவிக்க நேரிடுகிறது. அவ்விதகாலங்களிலே சந்நியாசிகள் தாமேபுறப்பட்டுப் பனிக்கட்டியில்மூடுண்டு விறைத்துக்கிடக்கும் பிரயாணிகளைத் தேடமுடியாது ஆகையினால் இந்நோக்கத்திற்காய் ஓர்சாதி நாய்களை அவர்கள் வளர்க்கிறார்கள். அவை மெத்தப் பெலமும் புத்திசாதுரியமுமானவை. பனிக்கட்டியில் அமிழ்ந்தி வருந்தப்படும் பிரயாணிகளை மீட்கும்படி இந்தநாய்களை அனுப்பும்போது சந்நியாசிகள் அவற்றின்கழுத்தில் பிரண்டிப்போத்தலொன்றுகட்டித் தேகத்தில் மடித்த கம்பளியொன்றைச் சுற்றிவிடுவார்கள். தொய்ந்துபோன பிரயாணியை நாய் கண்டால் அது அவனுக்குமுன்னே போய் நிற்க அவன் பிரண்டியைக்குடித்துக் களை தெளிந்து நாய்மேற் சுற்றியிருக்கும் கம்பளியையும் எடுத்துப் போர்த்துக்கொண்டு நாய் வழிகாட்ட அதன்துணையுடன் மேற்காட்டிய மடங்களில்வந்துசேர்வான். பயணக்காரன் முற்றும்விறைத்துச் சொரணையற்றுக்கிடப்பானால் அந்நாய் நெடுநேரமாய்நின்று அவன் முகத்தையுந் தேகத்தையும் நக்கிச் சூடுபிறப்பிக்க அவன் விழித்து பிறண்டியைக்குடித்தபின் நாய் மடத்திற்குப்போய் உரத்துக் குலைக்கும். அதன்சத்தத்தைவிளங்கிச் சந்நியாசிகள் விளக்குடன்போய் நாயின்உதவியால் அம்மனிதனைக் கண்டுபிடித்து மிகு பத்திரமாய் மடத்திற்கொண்டுபோய்ச் சேர்ப்பர். ஒருவன் பனிக்கட்டிக்குள் அமிழ்ந்தியிருந்தால் இந்நாய்கள் பனிக்கட்டிகளைக்கிழறி அவனை வெளியேற்றுகின்றன. ஒருநாய்மாத்திரம் ஓர் மாரிகாலத்தில் 27 மனுஷரைச் சிலமோசத்திலிருந்துகாத்தது. தற்காலத்தில் இந்தமலைக்குடைப்பட்டுப் பிரயாணிகள் உள்ளேபோகக்கூடிய வசதிசெய்யப்பட்டிருக்கிறது. அதிக பெலமும் வளர்ச்சியுமுள்ள இந்தநாய்களை அதிகவிலைகொடுத்துவாங்குகிறார்கள். இந்த பெர்னர்து சபையாரின் நாய்கள் இந்த யுத்தத்திலும் தக்க உதவிசெய்துவருவதாய்க் கேள்விப்படுகிறோம். டாடனல் சலசந்தியில் நடந்துவந்த யுத்தத்தில் மிகு உதவிசெய்துவந்தன. அன்றன்று யுத்தம் முடிந்தவுடனே நாய்களை அவிழ்த்துவிடுவார்கள். அவைகள் போர்க்களமெங்கும் காயப்பட்டுக் கமுந்திரிந்து மரித்தவர்களைவிட்டுக் குற்றுயிராய்க்கிடப்பவனின் தொப்பியை வாயிற் கவ்விக்கொண்டுவந்து மேலவைத்துவிட்டுத் துக்கக்குரலாய் ஊளையிடும். மரணத்தறுவாயிலிருப்பவன் துருக்கனோ அங்கிலேயனோ இந்தியனோ என்னும் எந்தப் படையைச்சேர்ந்தவனென்றும் அதனால் தெரிந்துகொண்டு அதனைப் பின்சென்று அவ்விடத்திற்குப்போய் அவனைக்கொண்டுவந்து தக்க பரிகாரஞ்செய்வார்கள். ஆகவே நாய்களின் விவேகமும் சபையாரின் பரோபகாரமும் மெச்சற்குரியதேயாம்.

கீழான பிராணியாகிய இந்நாய்க்கு இவ்வித அறிவிருக்க மனுஷர் அறிவற்றவர்போல்நடப்பதும் கருணை உதவிசெய்யாதிருப்பதும் எவ்வளவுகேடு என்பதைத் தேவன் இதன்மூலமாக நன்குணர்த்துகிறார்.

## சுந்தரன்செய்த தந்திரம்.

(2ம் இலக்கப்பத்திரத்தொடர்ச்சி)

விநிதிவிட்டு [illegible] டியாரிடத்தில் அபலாரின் சுகஷேமங்களை விசாரித்துக்கொண்டிருந்த சுந்தரனுக்கு ஓர் இரையகப்பட்டது. அஃதெப்படியெனில், தான் முன் சாஸ்திரஞ்சொல்லிப்பொருள்கவர்ந்துசென்ற சோமநாதபிள்ளையின் மனைவி ஓர் புத்திரியைப் பிரசவித்தாளென்றும அது இறந்துபோய்விட்டதினால் துக்கசாகரத்தில் அமிழ்ந்தியிருக்கிறாளென்றும் அறிந்துகொண்டான். அதனால் நெடுநேரசம்பாஷணைசெய்தபின் கிழவி சொல்லுகிறாள்; அப்புத்திரி ஈஸ்பரகிருபாகடாட்சத்தால் கிடைத்ததாம். அவர்கள் நெடுநாள் பிள்ளையின்றியிருக்கையில் ஓர்பெரியவர்வந்து பயப்படாதே ஓர் புத்திரபாக்கியங்கிடைக்குமென்று சொல்லிப்போனாராம். அவ்விதமாய் ஈஸ்பரன் கொடுத்தபிச்சையை இடையில் எடுத்துக்கொண்டது பரிதாபத்துக்குரியது. அவர்களுக்குத் திரண்ட ஆஸ்தியுண்டு. அதைஆளப் பிள்ளையில்லையேயென்று பெற்றோர் மிக மனம்வருந்துகிறார்களென்று சொல்லிமுடித்தாள். இதைக்கேட்ட சுந்தரனுக்கு இருந்த உட்கூதல்தீர்ந்து "தேடிப்போனபூண்டுகாலிற் பட்டதுபோல" மிகு சந்தோஷமுளனாகிப் பாட்டியாருக்கு வந்தனஞ்சொல்லிப் புறப்பட்டுப்போனான். துளசிக்கு மணமும் முள்ளுக்குக்கூர்மையுந் தொடக்கத்திலேயுண்டாதலால் சுந்தரனுந் தன் சொந்ததந்திரயுத்தியைக்கொண்டு போகும்போது சோமநாதபிள்ளை வீட்டிலில்லாத தருணத்தையறிந்து முன்போல் வேஷம்பூண்டு முன்மதியடிமேல் வந்துநின்று "அடிநால்லாருக்கும் தனிநாக்கில்அமிர்தமு"மாய் அடியம்மா உனக்கு ஒரு நற்செய்திகொண்டுவந்திருக்கிறேன், தாக்கியாமல் இங்கே வாவென்று கூப்பிட்டான். அத்தருணம் சோமநாதபிள்ளையின்மனைவி தன்மகள் ஆண்டனுபவித்த பொருட்களைப் பார்த்துத் துக்கித்துக் கடவுளை நொந்துகொண்டிருந்த சமயமாயிருந்தது. அவள் இச்சத்தத்தைக்கேட்டதும் மயிர்சிலிர்த்துத் திடுக்கிட்டு அதாரென்றுபார்க்க வெளியேவந்தாள். அத்தருணம் சுந்தரனின் உருவத்தைக் கண்டாள். காணவே முன்வந்துபோன சாமியாரென றறிந்துகொண்டாள். உடனே ஓடிப்போய் அவன்பாதத்தில்விழுந்து ஸ்மரணையற்றுக்கிடந்தாள். அத்தருணம் சுந்தரனே "உரலுக்குட்பட்டபண்டம் உலக்கைக்குத்தப்புமோ"வென்றுஎண்ணி மிகுசந்தோஷவசத்தனாகிப்பயப்படாதே, உனது மகளுக்காகவா கவலைப்படுகிறாய்! அவளுக்கு நிருதையுமில்லை. நடந்தசங்கதி உனக்குத் தெரியாதிருக்கலாம். உங்கள் ஆத்திரத்தை ஈஸ்பரன் அறிந்து உங்களுக்கு மெய்ஞ்ஞான புத்திரியொன்றை அருளினார். நீங்களோ அந்நாருநுந்தகார ஐசுவரிய புருடனைத்தேடி மணஞ்செய்யத்துணிந்தீர்கள். "பணத்தையல்லக் குணத்தைப்பார்" என்னும் முதுமொழியை மறந்துவிட்டீர்களா? எண்ணெயுடன் தண்ணீர் சேருமா? அவளுக்கது தகாதிருந்தது. ஆதலால் ஈஸ்பரன் அவளைத் தெய்வலோகத்துக்கழைத்து முன் சுபசெய்தியைத் தெரிவிக்க வந்தவனாகிய என்னையேதெரிந்து வதுவை செய்துவைத்திருக்கிறார். நாங்கள் அங்கே சுகசேமமாய் வாழுகிறோம். இருந்தவிடத்திலிருந்தால் துரும்பும் ஏற்றம்பெறும். நீங்களும் எங்களைவந்து சந்திக்குங்காலம் வரும். அப்போது கூடிக்குலாவி உல்லாச கொண்டாட்டுக களியாட்டில பொழுதுபோக்கலாம். அத்தருணத்திலே முன்பூண்ட உடையணிகளை வைத்திருப்பது உங்களுக்கும் விருப்பமாயிருக்கும். ஆதலால் அவள் தனது உடையணிகளை வாங்கிவரவும் தனது சுகசேமங்களைத் தெரிவிக்கவும் என்னையனுப்பினாள். பயப்படாதே எ[illegible]ன்றான். அதைக்கேட்ட சோமநாதபிள்ளைமனைவி ஆனந்த பரவசமாகிக் கடலிலாழ்பவனுக்கோர் மிதவைகிடைத்தாற்போலச் சந்தோஷமடைந்து தன்மகளின் சுகசேமங்களைக்குறித்துப் பல கேள்விகளைக் கேட்டாள். சற்றுநேரம் உட்காரும்படிவேண்டிக்கொண்டாள். சுந்தரனோ "இருட்டுவிட்டுப்போனால் திருட்டுக்கை நிற்குமா" என்றபடி கிடைத்ததருணத்தைக் கைவிடாமல்சொல்லுகிறான். அடஅம்மா அவள் என்னைக் கணமேனும்பிரிந்திருக்க மனமற்றிருக்கிறாள். உடனேவந்து கலியாணசோபனஞ்செய்தியறிவிக்கவும் அதேதடையாயிருந்தது. உங்கள்சுகசேமங்களை விரைவில் வந்துசொல்லும்படியே என்னையனுப்பினாள். நான் தாமதிக்கலாகாது. நீங்கள்சுகமாயிருக்கிறீர்களென்றசெய்தியை நான் உடனேபோயறிவிக்கவேண்டும். நீங்கள் தயவுசெய்து அவளுக்குத் தருகிறதைத் தந்தனுப்புங்கள், மறுபடி சுகசெய்தியுடன் ஒருமுறை வருவேனென்றுசொல்லி "எருதுக்குந்தன் புண்ணுழற்சி காக்காய்க்குந்தன் பசியுழற்சி" என்றாற்போலப் புறப்படத் தீவிரித்தான். அதைக்கண்ட சோமநாதபிள்ளைமனைவி மகளுடைய நகைகளையும் ஆடையாபரணங்களையும் மூட்டையாய்க்கட்டி அவன்கையிலொப்புவித்து இன்னொருமுறைவருகையில் பிள்ளையையுங்கூட்டிவரப்படாதா என்றாள். அதற்கவன் [illegible] பானுத்தரவில்லை, ஆயினும்பார்ப்போம்: போய்வருகிறேனென்று துரிதமாயெழுந்துசென்று ஓர் மறைவிடந்தேடித் தன்வேஷத்தை மாற்றிக்கொண்டு ஓடிப்போனான். போகும்போது "அஞ்சினவன்கண்ணுக்கு ஆகாசமெல்லாம் பிசாசு" என்பதுபோல வழியில் எவரைக்காணினுந் திடுக்கிட்டும் அங்கிங்கு திரும்பிப்பார்த்துக் கொண்டும் போனான். போகையில் ஓ! இவ்வளவில் விட்டுவிட்டு வந்துவிட்டேனே! "பதறுங்காரியம் சிதறும்" என்றபடி மனம் பதறாமல் காரியம்பார்த்தால் இன்னும் எவ்வளவோ லாபம்பெறலாமே என்னும்அவா அவனுள்ளத்தைக் கொள்ளைகொண்டது. ஆயினும் "கரும்பினியதென்று வேரோடுதின்னலாமா" போனது போகட்டுமென்று தன்மனதைத் தேறுதல்கொண்டு தன் அதிர்ஷ்டத்தையும் சோமநாதபிள்ளைமனைவியின் மௌட்டிகத்தையும் நினைத்துத் தன் கெட்டித்தனத்தை மெச்சிக்கொண்டுபோனான். சோமநாதபிள்ளைமனைவியோ ஆனந்தசாகரத்தமிழ்ந்தித் தலைவன்வரவை ஆவலாய் எதிர்நோக்கிக்கொண்டிருந்தாள். (வரும்)

### கையொப்பவரவு.

புலோலி.

| | |
|---|---|
| மாரா ஸ்ரீ ஆ-ஆ. சிதம்பரப்பிள்ளை | 2—00 |
| யாழ்ப்பாணம் | |
| " S. அருளானந்தம் | 2—00 |
| பேராக். | |
| " ஞா. நடராசா | 2—00 |
| " K. V. தம்பிமுத்து | 2—25 |
| கோலாலம்பூர். | |
| Rev. S. ஏபிரகாம் | 5—00 |

## யாழ்ப்பாணம்.

வார்ச்சீர்—மழையில்லை. பொதுவில் வேளாண்மை நயப்படவில்லை. புகையிலைச்செய்கையில் ஊரவர் துரிதங்காட்டுகின்றனர். பணப்புழக்கக்குறைவு. பொருட்களெல்லாம் விலையேற்றம்.

விவாகம்—சென்றமீ 29உ நம்மூரில் தந்திஇன்ஸ்பெக்டர் மெஸ், எஸ். பிரகாசம் தம்புவுக்கும் மிஸ். பொ. மேரி நல்லம்மாவுக்கும் நம்மூர்க் கத்தோலிக்க தேவாலயத்தில் செபமாலைமாதா பரிபாலனம் குருசிரேஷ்டர் அந்த்ரேயா(?) [illegible] வணக்கத்துக்குரிய மத்தியுஸ் சுவாமியாரவர்களால் சுபக்தன மெய்விவாகத் திருச்சடங்கு நிறைவேற்றப்பட்டது. அத்தருணம் பலசிநேகிதரும் மொட்டார்தவண்டிகள்மூலமாயும பாதசாரியாயும்வந்து விவாகத்தைச் சிறப்பித்தனர். மேற்படி சுவாமியாரவர்களும் மன்றலமனைவந்து தம்பதிகளுக்கு ஆசிகூறிப்போயினர். இளசனசிநேகிதரால் நூறுக்கணக்கான வாழ்த்துத்தந்திகள் அனுப்பப்பட்டன. தம்பதிகளுக்கு மங்களவாழ்த்துக் கீர்த்தனங்களும் பாடப்பட்டன. நாமும் பல்லாண்டுச் சுகசோபனவாழ்த்துதல் கூறுகின்றோம்.

சுப்பிரீங்கோடு—யாழ்ப்பாணக் கிறிமினல்விசாரணைச் சுப்பிரீங்கோடு நேற்று ஆரம்பமாயிற்று. இம்முறை கௌரவ, சம்பயோ நீதிபதியே விளக்கத்துக்கு வந்தார். நீதியாசர் தம் பரிவாரமும் நம் ஏசன்றர் நியாயதுரந்தர ராதியோருஞ்சூழப் பெரியமாதாவின் ஆசனக்கோயில்சென்று மணிகனாரப்பரிக்க அக்குநடந்த ஆராதனையிற் பங்குபற்றியபின்னர் நீதாசனமேறினார்,

இம்முறை விளக்கத்துக்குப் பாரப்படுத்தப்பட்டவழக்குகள் ஐந்து. அதில் புங்குடுதீவுக் கொலைவழக்கும் கொக்குவில்கொலைவழக்கும் விளக்கத்தில்வந்து எதிரிகள் கைபிழைபாட்டுக் கொலைக்குற்றமென்று ஒப்புக்கொண்டார்கள். சாவனைச் செபமாலைமாதா கோவிலுக்கு கெடுந்தீவிலிருந்து அளவின்மிச்சமான ஆட்களைபேற்றி அனேகர் ஜிவமோசமடையக் காரணராயிருந்த தண்டையலின் வழக்கும் விளக்கப்பட்டது. இவைகளின் தீர்ப்பும் மிஞ்சியவழக்குவிபரமும் மறுமுறை தருவோம்.

தம்மேசன்றர்—இவர் தெருமாற்றுவரிப்பணக்கழிவு வண்டி கொம்பர்முடித்தல் முதலியகருமங்களில் சற்றேறட்டத்தில் கின்றுதிரும்பினார். இவர் சுயநயப்புளிகளின் பேச்சுக்குச்செவிசாயாமல் தம்சித்தப்படி கடமைசெலுத்திவருகிறாரெனத்தெரிகிறது.

மரணசங்கதி—மயிலிட்டி திரில்றூராயிருந்த மெஸ், எஸ், விசுவலிங்கம் சென்றமீ 26உ தேகவியோகமானார். இவரது மனைவி புத்திரர் இனசனாதியருடனே நம்மதுதாபமுமிருக்கிறது.

யாழ்ப்பாணடிஸ்திரிக்கோடு—டிஸ்திரிக் நீதிபதி மெஸ், பி. ஈ. பீரிஸ்அவர்கள்லீவிற்சென்றதால் 5உ முதல் 12உ வரைக்கும் பரிஸ்டர் மெஸ், ஜே. ஏச். வன்னியசிங்கம் அவர்கள் டிஸ்திரிக்கு நீதிபதியாயும் பொலிசு நீதிபதியாயுமிருந்து அலுவல்பார்த்து வருகிறார்.

றெயில்தங்குதல்—நேற்றுப்பின்னேரம் நாலேமுக்கால்மணிவரையில் காங்கேசன்துறைக்குவந்த புகைரதம் இணுவில் ஆஸ்பத்திரிக்கு நேரேவந்து நின்றுவிட்டது. இது ஏனென்று விசாரித்தால் ஆஸ்பத்திரியிலுள்ள ஓர்நோயாளியைப்பார்க்க வருகிறவர்கள் போகிறவர்களுக்காகச் சிலகாட்களாய் இடையிடை இப்படியே வந்து நிற்கிறதென்றார்கள். இப்படி எப்போதும் நின்றால் யாவர்க்கும் வசதிதான். ஒழுங்குதான்! ஆனால் இவ்வசதிமற்றோர்களுங்கேட்டால் செய்யப்படுமோவென்பது சந்தேகம். சிலர்க்குமாத்திரமானால் அது நீதியாகாது. இதை றெயில்வே அதிகாரிகள் கவனிக்கவேண்டும்.

சீனிக்கொம்பனி—இக் கொம்பனியார் யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளிலுமிருந்து பதநீர் எடுக்கவும் பனங்கட்டி வாங்கவும் ஆயத்தமாயிருக்கிறார்கள். கிட்டியஇடங்களில் தொட்டிகட்டி அதிலூற்றும் பதநீர் குழாய்வழியாய்ச்செல்ல ஒழுங்குசெய்திருக்கின்றனர். தூரஇடங்களுக்கு அனுப்ப மொட்டார்ரதம் ஆயத்தப்படுத்தி யிருக்கின்றனர். இதன் மனேஜர் ஓர் பிடிவாதக்குணமுடையர்போற் றோற்றப்படுகிறார்.—ஈன்றுஆம் வீரன்.

## பல் வைத்தியம்.

**S. C. Patirana, Licensed Dentist,**

அமரிக்கமுறைப்படி பல்லுக் கட்டுகிற வைத்தியர் யாழ்ப்பாணம் சின்னக்கடை விக்ரோறியா ஹொட்டலில் வந்திருக்கிறார். இலங்கை வைத்தியகல்லூரியில் பிரதான தத்துவம்பெற்றவர், அமரிக்க பல்லுக் கட்டுகிற வைத்தியர் Dr. R. H. Lamb D. D. S. அவர்களிடத்தில் நல்ல சற்றிபிக்கேற் பெறறிருக்கிறார்.

வேலைகளின்விபரம்.

உண்மையான பல்லைப்போலவே கட்டுவார், எந்தப் பெலனுனதீனியுங் கடித்துத்தின்னலாம். யாதொரு வருத்தமுமில்லாமற் பல்லுப்பிடுங்குவார். முரசுகரைதல் பல்வலி பற்குத்தை முதலிய நோய்களை மூன்றுதினத்திற் சுகமாக்குவார்.

**நீர் அசௌக்கியமாய் இருக்கிறீரா?**

எந்தவிதமான வாதையினலாவது உமக்கு அசௌக்கியம் உண்டானபோது, நீர் "நான் தினந்தோறும் ஒரு தடவையாவது கொல்லைக்குப் போய் வருகிறேனு?" என்று கேட்டுக்கொள்ளவேண்டும். "இல்லை" என்று ஏற்பட்டால், (இராத்திரி படுக்கைக்குப்போகும் போது) டோன் என்பவருடைய ஜீர்ண மாத்திரைகளில் (டோன்ஸ் டின்னர் பில்ஸ்) இரண்டு அல்லது மூன்று நீர் எடுத்துக்கொள்ளும். மறுநாள் காலையில், மலசுத்தி சகஜமாய் ஆகும். சுகமுண்டாகும். மலபந்தம் என்பது என்னவென்றால், மலம் குடலில் தங்கவேண்டிய காலத்திற்கு அதிகமானகாலந் தங்கி, விஷத்தன்மையுள்ள வஸ்துக்களை யுண்டாக்கி விடுவதேயாம். இந்த விதமான மலபந்தத்தினுலேயே இந்த உலகத்தில் கணக்கில்லாத ரோகங்கள் பிறக்கின்றன. ஆகையால், கீழே குறித்திருக்கிற ரோகங்கள் பலவும் மலச்சிக்கலினுலேயே உண்டாகின்றன என்று அறிந்துகொள்ளவேண்டும். பித்தப்பை ரோகங்கள், பித்தம், பித்தக்காய்ச்சல், அஜீர்ணம், பசிமந்தம், தைர்யவீனம், அசதி, இதயவாதை, தலைச்சுற்றல், தலைநோய், வயிற்றுப்பசம், இரைப்பையிற் புளிப்பு, ஸ்திரீகளுக்கு உண்டாகும் ரோகம் முதலானவை. மலபந்தம் நீடித்திருந்தால், இரத்தம் கெட்டுப்போய், தேகசௌக்கியம் கெட்டேபோகும். (டோன்ஸ் டின்னா பில்ஸ்) டோன் அவர்கள் ஜீர்ணமாத்திரைகள் மூலிகைகளினுலேயே தயாரானவை.

இம்மாத்திரைகள், குடலிலிருந்து மலத்தையும், விஷவாயுவையும் வெளியாக்கி, பித்தப்பையைச் சரிப்படுத்தி, பித்தநீரைத் தாராளமாய்ப் பெருகச்செய்து, தேகத்தைச் செளக்கியமும் அழகுமுள்ளதாக்கும். இம்மாத்திரைகள் புருஷர் ஸ்திரீகள் சிறுவர்கள் ஆகிய எல்லாருக்குமே சரீரவாதையைச் சீக்கிரத்திலே நீக்கிச்சுகம் உண்டாக்கும்.




12 அணு புட்டியளவு.

விலை அணு 4, 8, 12 உள்ள புட்டிகள் வாங்கலாம். 12 அணு புட்டியில் 60 மாத்திரை இருக்கும். 4 அணு புட்டியைவிட 5 பங்கதிகம் இருக்கும்.

இவை, சீமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜெண்ட் அனடப்பிலியு. ஏச். நமல்லர் துரையவர்களிடத்திலும் கிடைக்கும்.

Doan.

## இலங்கை.

காய்க்குட்டியால்நேர்ந்தகொலை—கொழும்பில் மாங்கோ என்ற சிங்கள ஸ்திரீயிட்டில் டாமா என்பவன்விட்டுநாய் குட்டி போட ஆகை அவன் டாமாவிட்டில் எடுத்தெறிந்தான். அவன்கோபங்கொண்டு மாங்கோவிட்டில் மறுபடி எடுத்துஎறிந்தான். அதனால் மாங்கோ கடுஞ்சினமுற்றுக் கத்தியுடன்போய் டாமாவைக் குத்திக்கொன்றுவிட்டாள். சுப்பிரீங்கோட்டில் மன்னிப்புக்காகச் சிபாரிசுசெய்யப்பட்டாலும் நீதிபதி தூக்குத் தண்டனையையே விதித்துவிட்டார்.

கொலையுந் தற்கொலையும்—கொழும்பில் பார்த்தலோமேயுவென்பவரின் வங்களாவில் பணிவிடைகாரனொருவன் உடன்பணிவிடைகாரனொருவனிற் சினங்கொண்டு அவனைச்சுடப்போகையில் தன்னைஙிர்ப்பட்ட வேறொருவேலைகாரனைச் சுட்டுக்கொன்றான். எசமானையுங் கொல்லும்படி சுட்டபோது இலக்குத்தப்பிவிட்டது. தானும் தற்கொலைசெய திறந்தான்.

பத்திரிகை களவெடுத்தல்—கொழும்புச்சிங்களபத்திரிகை ஆபிசொன்றில் பிச்சேஷாகூலிக்காரன் சிலபத்திரிகைகளைத் திருடி விற்றதால் ஒருமாசச்சிறைத் தண்டனை அடைந்தான்.

# யுத்த தந்தி.

## பிரான்சிய பெல்சிய சேர்மனிய யுத்தம்.

24உ நமதுபீரங்கிப்படைகள் சாய்சன் பட்டினத்துக்கருகிலும் சாம்பெயின் பகுதியிலுமுள்ள சத்துருஅரண்களைப் பலமாக நாசப்படுத்தின. பின்மது 24 ஆகாயவிமானங்கள் மெட்லைபட்டினத்தின் புகைரத ஸ்டேசன்கள்மீதும் போர்வீரரிருக்கும் சாலைகள்மீதும் 130 வெடிக்குண்டுகளை எறிந்துதகர்த்தன. இரண்டுஆகாயப்படைகள் தகர்ப்பவர்க்கு உதவியாயிருந்தன. அவைகள்சேர்மனிய ஆகாயவிமானங்களுடன் சண்டைசெய்துகொண்டிருந்தன.

ஆகாயப்படைகளெல்லாம் பலமாய்த் தகர்க்கப்பட்டாலும் ஒருவிமானந்தவிர மற்றெல்லாஞ்சேமமேதிரும்பிவிட்டன. சேர்மனியர் சுரங்கங்களை வெடிக்கச்செய்து பலமாய்த்தகர்த்தபின் அராஸ் லென்ஸ் பட்டினத்திற்கு மேற்கேயுள்ள நமது போர்முனையைத்தாக்கிப் பல 100 யார்தூரமுள்ள நமது முன்வரிசைஅரண்களில் புகுந்துவிட்டனர். நாம் பதிலுக்குத்தாக்கிச் சத்துருக்களின் பிரயத்தனத்தை விலக்கிவிட்டோம். சத்துருக்களை அவ்விடத்தைவிட்டு அப்புறப்படுத்தியும்விட்டோம். ஆயினும் 100 யார்தூரமுள்ள அரண்களை [illegible]ன். நமதுபீரங்கிப்படைகளும் மெஷின் பீரங்கிகளும் சேர்மனியருக்குப் பலசேதத்தை விளைவித்தனவென்று பிரான்சியஅறிக்கை கூறுகிறது.

ஆர்டாயிஸ் என்னுமிடத்தில் குண்டுகளைக் கையாலெறிவதும் ஆகாயப்படைகள் டோர்பிடோக் குண்டுகளைஎறிவதும் மிகச்சுறுசுறுப்பாய் நடந்துகொண்டிருந்தன. ராயிஎன்னுமிடத்தில் பிரான்சியபீரங்கிப்படை சேர்மனியரைத் தாக்கிற்று. சான்சிப் பட்டினத்தில் 10 குண்டுகள்விழுந்தது. ரெம்ஸ் மிடில்கர்க் கலிகல்ஸ்ட் என்றஇடங்களில் பிரான்சிய ஆகாயப்படைகள் குண்டுகளைஎறிந்து சேர்மனியகோட்டைகளை நாசமாக்கின. லூஸென்ற இடத்தைச்சுற்றி இருபுறப் பீரங்கிகளும் சுறுசுறுப்பாயிருந்தன. கௌச்சேமின்,டிசின், பீலிகின் இவ்விடங்களைச்சுற்றி இருபக்கத்தாரும் பீரங்கிப் பிரயோகத்தில் சுறுசுறுப்பாயிருந்தனர். பிவிகினுக்கருகில் பிரான்சிய பீரங்கிப்பிரயோகத்தால் சத்துருஅரண்களில் மார்டர்என்னும் குண்டுபிரயோகம் ஓங்கவில்லை.

25உ ஒய்சர்நதிசமுத்திரத்திற் கலக்குமிடத்திற்கருகில் சத்துருக்கள் அதிஉக்கிரமாய்க் குண்டுகளைஎறிந்தனர். நியுபோட்டில் சேர்மனியர் இருபதினுயிரம் குண்டுகளைப்பொழிந்தனர். அவர்கள் காலாட்படைஅரண்களிலிருந்து வெளிப்படவுந்தனித்தும் பிரான்சியபீரங்கிப் பிரயோகம்தடுத்துவிட்டது. கொஞ்சம்பேர்வெளிவந்தும் சிதறடிக்கப்பட்டனர்.

கெட்சாஸகால்வாயை சிலசத்துருக்கள் தாண்டஎத்தனித்தும் நமதுபீரங்கிப்படை அவர்களைப்பின்னிடச்செய்தது. அருஸலென்ஸ்தெருவுக்குமேற்கே ஆடய்லென்னுமிடத்தில் சத்துருக்கள் ஓர் சுரங்கத்தைவெடிக்கச்செய்து மறுபடியும் புதிதாய்த்தாக்க முயறசித்தார்கள். ஆனால் துப்பாக்கிகளாலும் கைக்குண்டுகளாலும்அவர்கள்முயற்சியைத் தடுத்துவிட்டோம். இதற்குத்தெற்கேயும் இவ்விதமுயற்சிசெய்து அபசெயமடைந்தனரென்று பிரான்சியசெய்திகூறுகிறது.

25உ இன்றுகாலை 6 மணிக்கு டன்கர்க்கின்மேல இரண்டு ஆகாயவிமானங்கள் குண்டுகளைஎறிந்தன. நியுபோட்டுக்குச் சமுத்திரத்திற்கப்பால் ஒருபிரித்தானியவிமானம் சேர்மன் கடல்விமானத்தை நீருள் மூழ்கடித்துவிட்டது.

குண்டுகளால் நான்சியில்சிலவீடுகள்நாசமடைந்தன. பட்டினத்தின்மேல் 8 சேர்மன் விமானங்கள் குண்டுகளைஎறிந்தன. சேர்மன்சக்கிரவர்த்தியின் சென்னதினத்தன்று அப்பட்டினம் இன்னொருமுறைதாக்கப்படுமென்று அநகரவாசிகளுக்கு எச்சரிக்கைசெய்தஅறிக்கைகளையும்ஆகாயவிமானங்களிலிருந்து சத்துருக்கள் எறிந்தார்கள்.

27உ நேற்று சத்துருக்களின் 27 ஆகாயவிமானங்கள் யுத்தத்திற்குவந்தன. நமது 3 விமானங்கள் எதிரிகளின் 2 விமானங்களைத்தாக்கின. நமது இரண்டுவிமானங்கள் கீழேபோகும்படி செய்யப்பட்டன. அவைகள்சேமமே கீழேவந்தன. ஊலைகர்ப்புறத்தில அகோரப் பீரங்கிப்பிரயோகம் நடந்தது. புயீருமிலெஸ்பகுதியில் சத்துருக்களின் பீரங்கிகளும் சுறுசுறுப்பாயிருந்தன. நாமதக்கபடி பதிற்குண்டுசொரிந்தோம்.

சத்துருச்சேனைசெல்லும் ஸதீன் றெயிற்லைனும் பகுதிக்கு நாம் பீரங்கிப்பிரயோகஞ்செய்து அவர்கள் சுரங்கங்களையுடைத்தோமென்று பிரான்சிய அறிக்கைகூறுகிறது.

28உ இன்றமுழுதும் எல்லா முன்னரண்களிலும் மும்முரமான போராட்டங்கள்நடக்கின்றன. பெல்சியத்திலுள்ள சேர்மனியசுரங்கங்கள் அதிகசேதமுற்றன.

29உ ஆர்டாயிசில் மும்முரமான பீரங்கிச்சண்டைநடந்தது. சேர்மனியர் நான்குஇடத்தில்நம்மைஎதிர்த்தவர்தும் துரத்தப் பட்டார்கள். ஆனால் கிவெஞ்சிக்குத்தெற்கே ஓரிடத்தில் அவர்கள் அனேகசுரங்கங்களை வெடிக்கச்செய்து நமது சுயாதீனத்திலிருந்த அரண்களிற் பலதைப்பிடித்துக்கொண்டார்கள். மற்றிடங்களில் ஒரேசமயத்தில் நம்மைஎதிர்க்கப்பிரயத்தனப்பட்டு அதில் இரண்டிடங்களில் அதாவது நியூவில்லசபோலிரோட்டுக்குஅருகிலும் அருசுக்கு வடகிழக்கிலும் தோற்கடிக்கப்பட்டார்கள். மூன்றாமிடமான ருக்கினின் காட்டிற்குவடக்கில் நமது துப்பாக்கி, பீரங்கிகளின் பிரயோகங்களாலும் சத்துருக்கள் அரண்களைவிட்டு விலகக் கூடாததாய்ப் பிடிக்கப்பட்டார்கள். பிரான்சர் கொடூரயுத்தஞ்செய்து நியூவில்லாபோலி ரோட்டுக்குத்தெற்கேயுள்ள சுரங்கக்குழிகளை மறுபடிபிடித் துக்கொண்டு சத்துருக்களதிமும்முரமா யெதிர்த்த போதிலும் அவர்களைத்துரத்தியடித்தார்கள். பிடிக்கப்பட்ட குழிஒன்றில் 150 சேர்மன் பிரேதங்கள் கிடந்தன. ஆதலால் முன்சண்டையிலும் இதில் சத்துருக்களுக்கதிகசேதமென்று தெரிகிறது. பிரான்சர் அதிசுறுசுறுப்பாய்க் குண்டுகளை எறிந்துகொண்டிருந்தும் சத்துருக்கள் அருசையும் அதற்குத்தெற்கே ஓரிடத்தையும் குண்டுகளைஎறிந்துஅதிகமாய்த்தாக்கினர். லர்சிக்கினிக்குத் தெற்கேயுள்ள சத்துருஅரண்களைப் பிரான்சுப்பீரங்கிகள் நாசமாக்கின

30உ நேற்றிரவு 10 மணிக்குப் பரிஸ்பட்டினத்தின்மேல் ஒருசெப்பிளின் அனேகுண்டுகளை எறிந்தது. இரவு 9–20 மணிக்கு அக்கப்பல் சமீபத்தில்வந்த சங்கதிதெரிந்தது. உடனே பட்டினமெல்லாம் ஒரேஇருட்டாகத்திரும்பி நகரவாசிகளை உசாராயிருக்கும்படி எச்சரித்தற்காகத் தெருக்களெல்லாம் பணிஓசைகளும் வாச்சிய ஓசைகளும் முழங்கின. ஆகாயத்தில் சோதனைவிளக்குகள் பரவப்பட்டன. அதனுல் பரிசைக்காக்க ஆயத்தஞ்செய்யப்பட்ட ஆகாயக்கப்பற்படை மங்கலாய்க் காணப்பட்டது. 10 மணிமுதல் குண்டுச்சத்தங்கேட்டது. செப்பிளினிலிருந்து எறியப்பட்ட அனேகுண்டுகளுக்கு அனேகர் இரையானார்கள். ஓரிடத்தில் 15 பேரும் வேறோரிடத்தில் ஒருவனும் மூன்றுபெண்களும் இரண்டுகுழந்தைகளுங் கொலைப்பட்டார்கள். ஒருகுண்டுவீழ்ந்துவெடித்ததால் ஓர் வீடுவீழ்ந்து அதனுல் அனேகர் மாண்டனர். வேறுசிலஇடங்களில் பொருள்களுக்கு நட்டமாயிற்று. இக்குண்டுப்பிரயோகத்தின்முடிவு ஒருமணிக்கு நெருப்பவிப்பவர்களால் வாத்தியமுழக்கப்பட்டுத் தெரிவிக்கப்பட்டது. பட்டினமெங்கும் சனங்களெல்லோரும் ஆரவாரமின்றி யடங்கியிருந்தனர். மிகஉயரத்தில் பறந்துகொண்டிருந்த அச்செப்பிளினை அனேக ஆகாயவிமானங்கள் [illegible] போய் அதிமறைந்துபோகையில் குண்டுப்பிரயோகஞ் செய்தன.

31உ நியூவிலுக்கும் லாப்பொலிக்குமிடையிலுள்ள ரோட்டில் ஓர் சுரங்கத்தைவெடிக்கச்செய்தோம். சத்துரு அரண்களின்மேடைகள் தகர்க்கப்பட்டன.

நமதுபீரங்கிப்படை லென்சுக்குத் தென்கிழக்கேயுள்ள சாமான்வைக்கும் இடங்களையும் விஸ்னிக்குவடக்கிலுள்ள சத்துருக்கூடாரங்களையும்அழித்துவிட்டன.

கூப்பீருக்குக்கிட்ட ஓர் சேர்மன்வேலையையும் ஒரு பட்டாளத்தையும் அழித்துவிட்டோம். சத்துருக்கள் அருசுக்கு வடக்கே இரண்டுமுறை பெரிய குண்டுகளால்தாக்கியும் சித்திபெறவில்லை. சாம்பயினில் பிரான்சிய பீரங்கிப் பிரயோகத்தால் நாலுவெடிச்சம்பவம் நேரிட்டது.

ஆர்கோனில் சுரங்கச்சண்டைநடந்தது. மற்ற இடங்களெல்லாம் பீரங்கிப்பிரயோகம்நடந்தது. பரிசில் ஞாயிற்றுக்கிழமைஇரவு செப்பிளின் குண்டுப்பிரயோகத்தால் சிலர் இறந்து போனதாய்த் தெரிகிறது.

மாசிமீ 1உ நமதுபெல்சியத்திலுள்ள பெரிய பீரங்கிப்படை ஸதீன்ஸ் றெயிற்றவென்னும் பாலத்தின் சத்துருக்களின்வேலைகளைக் குண்டுகளால் பலனுடன்தாக்கின. பாலத்தின் அணைச்சுவரையும்அழித்தது. ரேயிக்குத்தெற்கில்நமது சுரங்கப்பீரங்கிகள்சத்துருக்களின்வேலைகளை அழித்தது. நமது அதிகதூரஞ்செல்லும் பீரங்கிகள் செயின்மிகேலுக்குவடக்கே குண்டுப்பிரயோகஞ்செய்ததென்று பிரான்சியஅறிக்கை கூறுகிறது.

பிரித்தானியரில் ஒருகூட்டத்தார் கெமலுக்குக்கிட்ட ஓர் சேர்மனிய சுரங்கத்துட்புகுந்து 30பேரைக்கொன்று 8 பேரைச்சிறைபிடித்து 2 மெசின்பீரங்கிகளை அழித்து விட்டனர். பரிசில் 2ம் முறை செப்பிளின்தாக்கியும் தக்க பலனடையவில்லை. தீப்பற்றக்கூடியதும் தகர்க்கக் கூடியதுமான குண்டுகளைப்போட்டு வடக்குப்பக்கங்களில் நஷ்டஞ்செய்தது. அங்குவிழுந்த ஒருபெரியகுண்டு 2 அந்தர் நிறையுள்ளதாயிருந்தது. நேற்றுப்பின்னேரம் ஒருசெப்பிளின் பரிசுக்குக் கிட்டவந்தும் சோதனைவெளிச்சம் போடப்படவே திரும்பிப்போய்விட்டது.

பிரேபேக்கில் தாக்கியதற்குப் பதிலாய்த்தாம் பரிசைத் தக்கபடி தாக்கியதாய்ச் சேர்மனியிலிருந்துவந்த கம்பியில்லாத் தந்திச்சமாசசாரங் கூறுகிறது.

4உ ஐசினிக்குவடக்கே ஆர்கனில் பிரான்சர் 9 சுரங்கங்களை வெடிக்கச்செயதனர்.

## பால்கன் நாட்டுயுத்தம்.

23உ இக்கற்றசேர்வியரில்மீதியாயிருந்த 2000 பேர் பிரித்தானியராலும் அமரிக்காராலும் இத்தாலியிலுள்ள பிரிண்டிசி துறைமுகத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டனர்.

ஆஸ்திரியரிடம் மொன்றினிக்கிறோவர் சமாதானம்பேசியது உண்மைதானும். ஏனெனில் லாவ்சென்குனறும் செட்டிஞ்சுககரும் பிடிக்கப்பட்டுப்போனதால் ஆஸ்திரியருடன் சமாதானப்பேச்சு நடத்திக்கொண்டே கொஞ்சநேரம் சம்பாதிக்க வேண்டியது அவசியமாயிருந்ததாம். அப்படிப் பேசிக்கொண்டே பின்வாங்கவும் ஸ்ரோசோ அலேசியோ என்றஇடங்களுக்குப் போய்விடவும் ஒரு வாய்ப்பு கிடைத்தது.

மொன்றினிக்கிறோவைப்பற்றி ஆஸதிரிய சேர்மனியருக்கிருந்த தப்பெண்ணம் ஒழிந்துவிட்டது. சமாதானப்பேச்சைமறுபடி தொடங்குமுன் மொன்றினிக்கிறோசேனையின் ஆயுதத்தைப்பறித்துவிடவேண்டுமென்றும் அவ்வேலை நடந்துவருகிறதென்றும் ஆஸ்திரியஅறிக்கை சொல்லுகிறது.

ஆஸதிரிய சேர்மன்சேனைகள் இதற்காக அங்குசென்றிருக்கின்றன. முரணுமல் ஆயுதங்களைக் கொடுத்தவர் அங்குவசிக்க இடம்பெறுவர். முரணுகிறவர்களின் ஆயுதங்களை வலோற்காரமாய்ப் பறித்துக்கொண்டு சிறையிடப்படுவர்.

மொன்றினிக்கிறோவின் தலைநகரான செட்டிஞ்சின் தேசாதிபதியாய் ஓர் பல்கேரியர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவரது முதற்கிரியை பட்டினத்தில் ஓர் தூக்குமரத்தை நிறுத்தியதுதான்,

24உ மொனஸ்தர்பட்டினத்தையும் அவ்விடங்களையும் பிரான்சு ஆகாய விமானங்கள் தகர்த்தன. அவ்வூரிலுள்ள புகைரத ஸ்ரேசனும் பாதைகளும் குண்டுச்சாலைகளும் தகர்க்கப்பட்டன. 200 வெடிகுண்டுகள் எறியப்பட்டன. வேறோர் ஆகாயப்படை செவ்கிளியில் சத்துருக்களின் இருப்பிடத்தில் 100 வெடிக்குண்டுகளை எறிந்தன.

சலோனிக்காவில் இரகசியமாய்ச்சேர்த்துவைக்கப்பட்டிருந்த 15000 பீட்ரோல் எண்ணெய்ப் போத்தல்கள் பிரான்சரால் கண்டுபிடிக்கப்பட்டுக் கைப்பற்றிக்கொண்டனர்.

25உ ஸ்கூற்றுரியை ஆஸதிரியர் வசப்படுத்திக்கொண்டனர். சேனைகள் பின்வாங்கிவிட்டனவென்றும் ஆஸ்திரியர் திக்சிச்டேனி லோகராட் பொட்கொரிடா முதலியபட்டினங்களைப் பிடித்துக்கொண்டதாயுந் தெரிகிறது. கைதிகளைப்பற்றி ஒன்றுஞ் சொல்லப்படவில்லை. ஆஸதிரியரும் பல்கேரியரும் பர்டெட் என்றபட்டினத்தைப்பிடித்துக்கொண்டிருக்கின்றனர். பல்கேரியர் வலோனுபட்டினத்துக்கும் ஆஸதிரியர் டுராசோ பட்டினத்துக்கும்போகிறார்கள். அவ்விடங்களில் எஸ்ஸத்பாச்சா யுத்தாயத்தஞ் செய்துகொண்டிருக்கிறார்.

பல்கேரியர் தமக்குச் சலோனிக்காவை விட்டுக்கொடுக்க வாக்குக்கொடுத்தாலன்றித் தாம் சத்துருக்களை எதிர்க்க முயலமாட்டோமென்றுசொல்லிவிட்டார்கள். இது ஆஸதிரியசேர்மனியருக்கு வெறுப்பையுண்டாக்கியிருக்கிறது.

மொன்றினிக்கிறோ அரசர் பிரான்சுதேசத்திலுள்ள லயான்ஸ்நகரில்போய்ச்சேர்ந்தார். அவருடன் ஒரு இராசகுமாரரும் ஒரு இராசகுமாரியும் போய்ச்சேர்ந்தனர். பிரான்சுப் பிரதிநிதிகளால் அவர்கள் வரவேற்கப்பட்டனர். பட்டினச்சனங்கள் ஆரவாரித்துத் தமதன்பைக்காட்டினர். இருமுறை அரசர் பலகணிவழியாய்த்தோற்றிச் சனங்களுக்கு வந்தனஞ்செய்தார்.

மொன்றினிக்கிறோவிலுள்ள பேரட்கோரிட்ஜா என்றநகரிலிருந்து அரசரும் அரசியும் புறப்பட்டது முதல் கடற்கரையிலுள்ள [illegible]ப் பட்டினம்வந்துசேருமிடவரையில் சத்துரு ஆகாய விமானங்கள் அவர்களைப் பின்தொடர்ந்துவந்து வெடிக்குண்டுகளை எறிந்துகொண்டேயிருந்தன. கடலில் அவர்கள் ஏறிச்சென்ற டொர்பிடோப்படகையும் சப்மரின்கள்தாக்கின. ஆனல் அரசருக்குக் காவலாய்ச்சென்ற இத்தாலிய சண்டைக்கப்பல்கள் அந்தச் சப்மரின்களைத்துரத்திவிட்டன.

28உ மொன்றினிக்கிறோவின் மிர்கோ இளவரசர் ஸ்கூற்றுரியில் இறந்துபோயிருக்கவேண்டும் அல்லது பிடிபட்டிருக்கவேண்டுமென்று ரோமில் நினைக்கப்படுகிறார்கள்.

4உ சலோனிக்காவில் சத்துருவிமானங்கள் குண்டெறிந்து தாக்கினதற்குப்பதிலாய் 14 நேசதேச விமானங்கள் பெகிரின் என்றஇடத்தில் குண்டுகளைவீசிவிட்டுச் சேமமேதிரும்பின,

எசத்பாச்சா இத்தாலியரால் கைதியாக்கப்பட்டு இத்தாலிக்கு அனுப்பப்பட்டதாய் ஒருசங்கதி பரவுகிறது

ஆஸ்திரியா கைக்கூலிகொடுத்ததினுல் 160 அல்பேனியர் கலகஞ் செய்கிறார்களென்று ஓர் பத்திரிக்கைகர் தெரிவித்தார்

## ருசிய துருக்கியயுத்தம்.

23உ சார்டோரிஸ்கியென்ற ஸ்தலத்துக்கு வடக்கேயுள்ள குன்றை மறுபடிபிடிக்கச் சத்துருக்கள் வீண்பிரயத்தனஞ் செய்துவந்தார்கள். ஸ்டிரிபாநதி நீஸாதிஇவைகளின் மத்தியகரையிலும் கீழ்க்கரையிலும் சத்துருக்கள்தாக்கின. அதை ருசியர்தடுத்துவிட்டனர். ஐய்சலோவிஸென்ற ஸ்தலத்துக்கு வடகிழக்கே சத்துருக்கள்தங்கியிருந்த ஒருகுன்றையும் டாப்ரோவாகிராமத்தையும் ராமதாக்கினேம். ஐய்சலோவிச்சுக்கு வடகிழக்கே சத்துருக்களால் வெடிக்கச்செய்த 4 பள்ளங்களைச்சுற்றி யுத்தம்நடக்கிறது.

பேர்சியாவின வடகரையிலுள்ள வான்ஏரிக்குத் தென்பக்கத்திலுள்ள ருசியர் துருக்கியரைத்துரத்தி வான்டன்என்ற ஊர்க்குமேற்கே ஓட்டிவிட்டனர். உருமியாஏரிக்குத்தெற்கிலுள்ள ருசியர் சகாடாநதிக்கப்பால குர்டுசேனைகளை ஓட்டிவிட்டனர்.

நீளமாயுள்ள போர்முனையிலுள்ள ருசியரைப் பின்னுக்குத்துரத்திவிடத் துருக்கர் செய்தபிரயத்தனம் அவர்களுக்குக் கேடாய்முடிந்தது. துருக்கர்தான் பெருஞ்சேதமடைந்து திரும்பிஓடினர். ருசியர் அவர்களைப் பின்தொடர்ந்துபோய ஹஸன்காலா பட்டினத்தைப் பிடித்துக்கொண்டு எர்சிரம்கோட்டைக்குள் அவர்களை ஓட்டிவிட்டனர். 1500 போர்வீரரும் ஒருபீரங்கியும் தளபாடங்களும் கூடாரங்களும் ருசியரால் பிடிக்கப்பட்டன.

பேர்சியாவில் சுல்டானுபாட் என்றபட்டினத்தை ருசியர் பிடித்துவிட்டனர். சத்துருக்களுமங்கிருந்த சேர்மன் ஸதானுபதியும் டிருஜாபட்டினத்துக்கு ஓடிப்போயினா.

25உ மேசோப்பொத்தாமியாவில் சேனதல் எயில்மர் தை 20உ சத்துருக்களை [illegible]ச்சென்று 21உ அமாரக்கால்வாய்க் கரைக்குமேல் 25 மைல்தூரத்தில் டைக்கிரிஸ்நதியின் கலக்

கரையில் சத்துருக்களைஎதிர்த்தார். துருக்கருக்குச் சேனைப்பலம்அதிகரித்து அன்றுமுழுதும் வெகுஉக்ஷடத்துடன் யுத்தஞ்செய்துகொண்டிருந்தார்கள். அதிக மழையுங்காற்றுமிருந்ததினுல் டைக்கிரிஸ்நதியில் வெள்ளம்பெருகிவிட்டது. ஆகையால் நம்பக்கத்தாரின் நடபடிகள் முற்றுப்பெறவில்லை, ஜெனறல் எயில்மரின்வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது.

24௳ பனமாக்கால்வாயின் சருகலைப்பற்றி விபரம் நிலையாய்த்தெரியாததினுல் அக்கால்வாயை மறுபடி திறக்குந்தேதியைககுறித்து முன்னுடி அறிவிக்கமுடியாதென்று கர்னல் கெய்தால்ஸ்என்பவர் தெரிவிக்கிறார்.

24௳ 50 ஆயிரம் செர்மனியபோர்வீரர் கொன்ஸ்தாந்திநோபிளுக்குப்போய்ச் சேர்ந்திருக்கின்றனர். அவர்கள் சனங்களைப்பயமுறுத்தி ஆட்சிசெய்யும் அன்வர்பாச்சாவுக்கு ஒத்தாசைசெய்யும்படி உத்தேசிக்கப்பட்டவர்கள். இராசரீகத்தில் திருத்தவிணப்பவிபவர்களென்று உத்தேசிக்கப்பட்டவர்கள் தினந்தோறும் இரகசியமாய்க் கொல்லப்படுகின்றனர். ஒருஇரவில் 21 துருக்க உத்தியோகஸ்தரின்கழுத்தில் கல்லைக்கட்டி போஸ்பரஸ்கடலில் தள்ளிவிட்டார்கள். செர்மனியர் அங்குபோகுமுன் கொன்ஸ்தாந்திநோபிளிலுள்ள செர்மனியருக்கும் துருக்கியருக்கும் நாடோறும் சச்சரவுகள் நடந்தன.

25௳ ஆசியதுருக்கியில் துருக்கரை ருசியர் பின்தொடர்ந்தபோது சில பீரங்கிகளையும் 700போர் வீரரையும் பிடித்ததாகவும் எர்சிரம்கோட்டையை மறுபடி தாக்குதற்பதாயும ருசியர் சொல்லுகின்றனர். எர்சிரத்தில் 120 ஆயிரம் துருக்க சேனைவீரரிருக்கின்றனர். அவர்களைத்தொடர்ந்து சென்ற ருசியர் 50 உத்தியோகஸ்தரையும் 4000 போர்வீரரையும் பலமெஷின்பீரங்கிகளையும் பலதளபாடங்களையும் கைப்பற்றினர். துருக்கர் ஓடிப்போகின்றனர். குதிரைப்படைஎர்சிரத்தைச்சேர்ந்துவிட்டது.

காக்கஸாஸில் ருசியபடை பிருபாபெகிறது எர்சிரத்துக்குக்கிழக்கில் 11 ஆயிரம் அடிஉயரமுள்ள ஒருகுன்றில் ருசியபடை தங்கியிருக்கிறது. அக்குன்பப்பனிக்கட்டியால் முடிகைகள் தாகளாயின 15 அடிஉயரம் பனிக்கட்டி குவிந்துவிட்டது. இப்படியிருக்கையில் புறப்படும்படி உத்தரவு கிடைத்தது, பனிமூடிய ஒருகுன்றின் வழியாய் அப்படைஇறங்கஆரம்பித்தபோது காற்று வெகுமும்முரமாயடித்தது ஆயினும் துருப்புகள் ஒற்றடிப்பாதையாய்நடந்து கழுத்தளவிலிருந்த பனிக்கட்டியில் ஒருபாதை உண்டுபண்ணினர். உடைகளெல்லாம் பனிக்கட்டியால் செய்யப்பட்டவைபோலாயின. முகங்களில் பனிக்கட்டிகள் ஒட்டிக்கொண்டன. பீரங்கிகள் கயிறுகட்டிக் கீழேஇறக்கப்பட்டன. சேனைகளுள் ஒருவனுவது சேதமடையவில்லை. துருக்கர் இவர்கள் இறங்குவார்களென்று எதிர்பார்த்திராமையால் திகைத்துபோயினர். ருசியர் சில தினங்களில் 120 மைல் போய்விட்டனர். அவர்களுடைய வலதுபக்கப் படை இப்போது ட்ரேபிசாண்டுபட்டினத்தை அணுகிக்கொண்டிருக்கிறது.

28௳ காக்கேசியாவில் துருக்கரிடமிருந்து ருசியர் தொகையான ஆகாரங்கள் உணவுப்பொருட்களைப் பறித்தெடுத்தனர்.

29௳ காக்கேசில் ருசியர் வெற்றியடைந்துசென்றுகொண்டிருக்கின்றனர். மேலாஜ்கார்ட்டிலிருந்து ஓர் துருக்கப்படை வகுப்பைநசுக்கி அறுபேரை மறியலாய்ப்பிடித்தனர். யுத்ததளபாடங்களும் பலசாமான்களையும்பிடித்தனர் மேலும் எர்சிரத்திற்கும் மூஷ்சுக்குமிடையிலுள்ள கிளைஸ்காவாட்பட்டினத்தை துருக்கரைத்துரத்திப்போய் அவரிடமிருந்த விசேஷ துப்பாக்கி மருந்துகுண்டு உண்டிப்பொருளாதியவைகளைப் பிடுங்கிக்கொண்டார்கள்.

31௳ ஆற்றுப்பெருக்கால் கட்டென்னுமிடத்திற்குச்சமீபத்தில் துருக்கரின் பாசறைகள் வெள்ளத்தால் முழுகின. ஜெனறல் டௌன்ஷென்டுடையவட்டமேற்கு முற்பகுதியிலுள்ள இடங்களெல்லாவற்றையும் விட்டுவிட்டு 200 யார்தூரம் துருக்கர் பின்னுக்குப்போயினர். ஜெனறல் டவுன்சனின் வேவாட்கள் சத்துரு அரண்களிற் பரவி 2000 யார்தூரம்முன்சென்றுபார்த்தனர். ஓரிடத்தில்யுத்தாயுதபாணிகளாய் 50பேர்இறந்துகிடக்கக் காணப்பட்டார்கள். 22 வரிசைகளுள்ள தம்போக்குவரவுக்கான வழிகளுள்ளதுமான துருக்க அரண்கள் காணப்பட்டன. ஜெனறல்டவுன்சனுடையஇடம் மேட்டிலிருந்ததால் வெள்ளத்தால் நாசமடையவில்லை. ஆறு வற்றுகிறது. இனி டைக்கிரிஸ் ஆற்றைக்கடக்கப் பிரயத்தனிப்பார்.

1௳ இரண்டுகிழமைகளாகக் காக்கேசில்நடந்த யுத்தத்தின்பலனுல் துருக்கர் அரண்படுத்தியிருந்த 40 மைல்தூரமுள்ள முன்னணியிடங்களை ருசியர்பிடித்தனர், குளிருள்ள மலையிடங்களிலிருந்து மாரிகாலத்தில் மனுஷர் சீவிக்கக்கூடியஇடங்களுக்கு ருசியர்வந்து சேர்ந்துவிட்டனர்.

3௳ துருக்கரை ருசியர் சவோஆற்றுக்குச்சமீபமாய்த் துரத்திப்போய் வான்நதிக்குக்கிட்ட ஓர் கிராமத்தைப் பிடித்தனர்.

பேர்சியாவில் ஜெர்மன்சாவுகருக்கிட்டச் சத்துருக்களை ருசியர் துரத்தினர்.

4௳ காக்கேசில் ருசியர் முன்செல்கையில் பனியால் விறைத்து இறந்த 300 துருக்கபிரேதத்தைக்கண்டார்கள்.

எர்சிரத்தைத் துருக்கர் விட்டுப்போய்விட்டதாக ஓர் பத்திரக்கடிதர் தெரிவிக்கிறார்.

## ருசிய செர்மனிய ஆஸ்திரியயுத்தம்

24௳ லெட்சாதியர் விபாரோமே தெயிஸ்பாதையின் மேல்பகலில் தவழ்ந்துசென்று செர்மனிய புகைரதப்பாதைக் காவலனைக்கொன்று தண்டவாளத்தை 10 யார்தூரம்எடுத்துவிட்டுக் காவலன் உடையைத்தரித்துப் புகைரதம்வரும்போது அபாயமற்ற குறியைக்காட்ட, வண்டிவந்து அதில்வீழ்ந்து பொடிப்பொடியாய்ப் போய் அதிலிருந்த 100 பேருங்கொல்லப்பட்டார்கள். மூன்றுமாசங்களின்முன் ருசியாவுக்கு அனுப்பப் பட்ட பெல்சியபீரங்கிப்படை பீற்றோகிறாட்டிலிருந்துபோர்முனைக்குச்செல்லுமுன் ருசியசக்கிரவர்த்தியாற் பரீட்சிக்கப்பட்டது

25௳ ருசியர் பின்சக்கிலிருந்து 3 மைல்தூரத்திலிருக்கிறார்கள்.

26௳ டிவின்சக்போர்முனையிலும் ஸ்ரிபாநதியின் மத்தியபாகத்திலுள்ள கரையிலும் சத்துருக்கள் இருந்தஅரண்களை ருசிய பீரங்கிப்படைகள் தகர்த்தன.

மாசிமீ 1௳ செர்னோவிட்சக்கு வடபக்கத்தில் டெனிஸ்றரை ருசியர் கிட்டிவிட்டனர். இப்பக்கத்தின் அந்தத்திலுள்ளசத்துருஅரண்கள்மேல் குண்டுமாரிசொரிகின்றனர்.

3௳ செர்மனியர் வெள்ளைவங்கிதரித்து டிவினுநதியைக்கடக்கமுயன்றுர் துரத்தப்பட்டனர்.

4௳ கலீஷியாவில் லென்ற்றெ என்னுமிடம் ருசியரால் பிடிக்கப்பட்டது.

## கடற்சங்கதி

